## ஒரு பார்வை - பகுதி 1

**ஷைத்தானின் வழியைப் பின்பற்றாதீர்கள்; ஏனென்றால் அவன் உங்களை மானக்கேடான தீய செயல்களில் ஈடுபடச் செய்வான். உறவினர்கள் மற்றும் ஏழைகளுக்கு தர்மம் செய்யுங்கள். வீடுகளுக்குள் நுழைவதற்கான விதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆண்களும், பெண்களும் தங்களது பார்வையை தாழ்த்திக் கொள்ளட்டும். அல்லாஹ் வானங்கள், மற்றும் பூமியின் ஒளியாவான். அவனுடைய ஒளிக்கு அழகிய உவமை கொடுக்கப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 15: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 24, அந்நூர்; வசனம்: 21 - 50; பிரிவு: 3 - 6

1. **ஈமான் கொண்டவர்களே! ஷைத்தானுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். யார் ஷைத்தானுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு அவன், மானக்கேடான செயல்களையும், தீமையையும்தான் ஏவுவான்.** (ஸூரா - அந்நூர்; பிரிவு: 3)

2. **உங்களில் வசதி வாய்ப்புள்ளவர்கள், உறவினர்களுக்கும், ஏழைகளுக்கும், அல்லாஹ்வின் பாதையிலே ஹிஜ்ரத் செய்பவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும்.** (ஸூரா - அந்நூர்; பிரிவு: 3)

3. **அவர்கள் மீது உங்களுக்கு வருத்தம் இருந்தால், அவர்களை மன்னித்து விடுங்கள். உங்களை அல்லாஹ் மன்னிக்க வேண்டுமென்பதை நீங்கள் விரும்ப மாட்டீர்களா? மேலும் அல்லாஹ் பிழை பொறுப்பவன், மிக மன்னிப்பவன், அன்பு மிக்கவன்.** (ஸூரா - அந்நூர்; பிரிவு: 3)

4. வீட்டிற்குள் நுழைவதன் விதிமுறைகள்: மற்றவர்களின் வீட்டிற்குள் நுழையும் முன்பு அங்கு உள்ளவர்களிடம் அனுமதி பெற வேண்டும். மேலும் அவர்களுக்கு சலாம் சொல்ல வேண்டும். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 4)

5. நீங்கள் யாரையும் அங்கு காணாவிட்டால், உங்களுக்கு அனுமதி கொடுக்கப்படும் வரையில் அதில் நுளையாதீர்கள். "திரும்பிப் போய் விடுங்கள்" என்று சொல்லப்பட்டால் அவ்வாறே திரும்பிவிடுங்கள். அதுவே உங்களுக்கு தூய்மையானதாகும். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 4)

6. யாரும் குடியிருக்காத வீடுகளில், அங்கு உங்களுடைய பொருட்கள் இருக்குமானால், அந்த வீடுகளில் நீங்கள் நுழையலாம். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 4)

7. இறைநம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும் தங்களது பார்வையைத் தாழ்த்திக் கொள்ளட்டும். மேலும் தங்களின் கற்பைப் பேணிக்கொள்ளட்டும். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 4)

8. பெண்கள், தங்களுடைய நெஞ்சுப் பகுதிகளில் முக்காடிட்டுக் கொள்ளட்டும். தங்களின் கணவர்கள், மற்றும் நெருங்கிய உறவினர்கள் அல்லாது வேறு யாருக்கும் தங்களின் அலங்காரங்களை வெளிக்காட்ட வேண்டாம். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 4)

9. மேலும் அவர்கள் தங்களது அலங்காரங்களில் மறைவானவற்றை அறிய வாய்ப்பு தருகின்ற விதத்தில் கால்களை தரையில் அடித்து நடக்க வேண்டாம். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 4)

10. ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்விடம் நீங்கள் செய்த தவறுகளுக்காக மன்னிப்பு கேளுங்கள். அதன் மூலம் நீங்கள் நன்மை பெறுவீர்கள். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 5)

11. அல்லாஹ் வானங்கள், மற்றும் பூமியின் ஒளியாவான். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 5)

12. அவனது ஒளிக்கு உவமை ஒரு மாடத்தைப் போன்றது. அதில் விளக்கு உள்ளது. அவ்விளக்கு கண்ணாடிக் குடுவைக்குள் இருக்கிறது. அந்தக் கண்ணாடிக் குடுவை ஒரு ஒளிவீசும் நட்சத்திரத்தைப் போன்றுள்ளது. அந்த விளக்கு வளம் பொருந்திய ஆலிவ் மரத்தால் எரிக்கப்படுகிறது. அம்மரம் கிழக்கத்தியதுமன்று, மேற்கத்தியதுமன்று. நெருப்பு தீண்டாத போதிலும் அதன் எண்ணை ஒளிரவே செய்யும். இவ்வாறு ஒளிக்கு மேல் ஒளியாகும். அல்லாஹ், தன்னுடைய ஒளியின் மூலம் தான் நாடியவருக்கு நேர்வழி காட்டுகின்றான். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 5)

13. அல்லாஹ்வின் ஒளியானது, யார் அல்லாஹ்வை துதி செய்து கொண்டு, தொழுகையை நிலைநாட்டி, ஜகாஅத்தைக் கொடுக்கிறார்களோ அப்படிப்பட்டவர்களின் வீடுகளில் ஒளிர்கிறது. (ஸூரா - அந்நூர்; பிரிவு: 5)

14. வானங்கள், பூமி ஆகியவற்றிலுள்ள அனைத்தும் அல்லாஹ்வை துதி செய்கின்றன. (ஸூரா - அந்நூர்; பிரிவு: 6)

15. பறவைகள், தனது இறக்கைகளை விரித்து பறக்கின்ற போது அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்கின்றன. (உலகிலுள்ள) ஒவ்வொன்றும் அதனதனுடைய வணக்கத்தையும், துதிபாடலையும் அறிந்து வைத்திருக்கின்றன. அல்லாஹ், அவர்கள் செய்பவற்றை நன்கறிந்தவன். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 6)

## ஒரு பார்வை - பகுதி 2

**அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் கட்டுப்படுங்கள். ஒருவரின் அறைக்குள் குழந்தைகள் மற்றும் வேலைக்காரர்கள் நுழைவதற்கான விதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. வயதான பெண்கள் விரும்பினால், அவர்களுக்கு ஹிஜாப் தளர்வு அளிக்கப்படுகிறது. ஸூரா அல்ஃபுர்கான் காஃபிர்களுக்கான தண்டனையின் வீரியத்தை விளக்குவதன் மூலம் தொடங்குகிறது. இறைநம்பிக்கையாளர்கள், சுவர்க்கத்திலிருப்பார்கள்.**

## தராவிஹ் - 15: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 24, அந்நூர்; வசனம்: 51- 64; பிரிவு: 7 - 9

1. **அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் கட்டுப்படுங்கள். அவ்வாறு நீங்கள் கட்டுப்படவில்லையெனில், தூதருக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பு அவருக்கானது. உங்களுடைய பொறுப்பு உங்களுக்கானது என்பதை நினைவில் கொள்ளவும். அவருக்குக் கட்டுப்பட்டால் நீங்கள் நல்வழி பெறுவீர்கள். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 7)**

2. **இறைத்தூதருடைய பொறுப்பானது, அல்லாஹ்வின் கட்டளைகளை மக்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்வது மட்டுமேயாகும். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 7)**

3. **விசுவாசிகளே! உங்களின் அடிமைகளும் பருவ வயதை அடையாதவர்களும் மூன்று நேரங்களில் அறைகளுக்குள் நுழைவதற்கு உங்களிடம் அனுமதி கோரவேண்டும். அவை: சுபுஹ் தொழுகைக்கு முன்பு, மதிய வேளைகளில் ஆடைகளை தளர்த்தியிருக்கின்ற சமயம், இஷா தொழுகைக்குப் பிறகு. இம்மூன்று வேளைகளும் உங்களுக்கான பிரத்யேக நேரங்களாகும். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 7)**

4. **உங்கள் குழந்தைகள் பருவம் அடைந்துவிட்டால், அவர்களும் மற்ற பெரியவர்கள் அனுமதி கேட்பது போல் அனுமதி கேட்க**

வேண்டும். இவ்வாறே அல்லாஹ் தன்னுடைய வசனங்களை உங்களுக்கு விவரிக்கின்றான். அல்லாஹ் (யாவற்றையும்) அறிந்தவன். ஞானம் மிக்கவன். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 8)

5. திருமணத்தை நாடமுடியாத மூதாட்டிகள் அலங்காரத்தை வெளிப்படுத்தாமல், தங்களின் மேலாடைகளைக் களைந்துவைப்பதால் அவர்கள் மீது குற்றமில்லை. ஆனால் அப்போதும் பேணுதலாய் இருப்பது அவர்களுக்கு நல்லது. (ஸூரா - அந்நூர்; பிரிவு: 8)

6. நீங்கள் கூட்டாகவோ அல்லது தனியாகவோ சாப்பிடுவதில் தவறில்லை. உங்களது தந்தையர்கள், தாய்மார்கள், சகோதர, சகோதரிகள், தந்தை வழி சகோதர சகோதரிகள், தாய் வழி சகோதர, சகோதரிகள், எவர் வீட்டுச்சாவியை நீங்கள் சொந்தமாக்கி வைத்துள்ளீர்களோ அவர்கள், மற்றும் உற்ற நண்பர்கள் ஆகியோருடன் சேர்ந்து உணவருந்தலாம். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 8)

7. வானங்களிலும், பூமியிலும் உள்ள யாவும் நிச்சயமாக அல்லாஹ்வுக்கே சொந்தம். அவன் மக்களின் எண்ணங்களையும், செயல்களையும் நன்கு அறிவான். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 9)

## ஸூரா - 25, அல்ஃபுர்கான்; வசனம்: 1 - 20; பிரிவு: 1 - 2

8. மக்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக, தன் அடியார் மீது குர்ஆனை இறக்கி வைத்த அல்லாஹ் அருள்மிக்கவன் ஆவான். அது சத்தியத்தையும், அசத்தியத்தையும் தெளிவாகப் பிரித்து காட்டும். (ஸூரா - அல்ஃபுர்கான்; பிரிவு: 1)

9. கியாமத் நாளை பொய்யென்று சொல்லி மறுத்தவர்களுக்கு அல்லாஹ், நரக நெருப்பின் ஜுவாலைகளை தயார் செய்து வைத்துள்ளான். தூரத்திலிருந்து பார்த்தாலும் நரகத்தின்

கொந்தளிப்பையும், இரைச்சலையும் அவர்கள் செவியுறுவார்கள். (ஸூரா- அல்ஃபுர்கான்; பிரிவு: 2)

10. அவர்கள் அனைவரும் சங்கிலியால் பிணைக்கப்பட்டு நரகத்தின் குறுகலான பகுதிக்குள் தள்ளப்படுவர். அவர்கள் அழிவை அழைப்பார்கள். ஆனால் “ஒரு அழிவை அல்ல, பல அழிவுகளை நீங்கள் அழையுங்கள்” என்று அவர்களுக்கு சொல்லப்படும். (ஸூரா - அல்ஃபுர்கான்; பிரிவு: 2)

11. இறைநம்பிக்கையாளர்கள், சுவர்க்கத்திலிருப்பார்கள். அதில் அவர்களுக்கு விரும்பியதெல்லாம் கிடைக்கும். அங்கு அவர்கள் நிரந்தரமாகத் தங்குவார்கள். இதுவே இறைவனால் பொறுப்பேற்கப்பட்ட வாக்குறுதியாகும். (ஸூரா - அல்ஃபுர்கான்; பிரிவு: 2)

## ஒரு பார்வை - பகுதி 3

**காஃபிர்கள் அல்லாஹ்வின் அத்தாட்சிகளை நம்ப மறுக்கிறார்கள். அவர்களின் ஆணவம், மறுமையில் அவர்களின் அழிவுக்கு வழிவகுக்கும். மூஸா (அலை), நூஹ் (அலை) சமூகத்தார்கள் மற்றும் ஆது, ஸமூது, அர்ரஸ் சமூகத்தார்களை அல்லாஹ் அழித்த விதம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. நிழல்கள், இரவும் பகலும், இரு கடல்களுக்கு இடையே உள்ள தடுப்பு போன்ற அல்லாஹ்வின் சில அத்தாட்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அல்லாஹ்வின் உண்மையான அடியார்களின் தன்மைகள் விவரிக்கப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 15: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 25, அல்ஃபுர்கான்; வசனம்: 21 - 77; பிரிவு: 3 - 6

1. **அல்லாஹ்வின் சந்திப்பை நம்பாதவர்கள், "ஏன் எங்களுக்கு வானவர்களை (நபியாக) அனுப்பவில்லை? ஏன் நாங்கள் அல்லாஹ்வை பார்க்க முடிவதில்லை?" என்று கேட்கின்றனர். (ஸூரா - அல்ஃபுர்கான்; பிரிவு: 3)**

2. **அவர்கள் மறுமையில் வானவர்களைக் காணும் நாளில், குற்றவாளிகளுக்கு எந்த நற்செய்தியும் இருக்காது. "அவர்களுக்கும், எங்களுக்கும் தடுப்பொன்று இருக்கக் கூடாதா?" என்று கதறுவார்கள். (ஸூரா - அல்ஃபுர்கான்; பிரிவு: 3)**

3. **மாறாக, அன்றைய தினம், சொர்க்கவாசிகள் சிறந்த ஓய்வெடுக்கும் இடத்திலும், அழகிய தங்குமிடத்திலும் இருப்பார்கள். (ஸூரா - அல்ஃபுர்கான்; பிரிவு: 3)**

4. **மூஸா (அலை), ஹாரூண் (அலை), நூஹ் (அலை), ஹூது (அலை), ஸாலிஹ் (அலை) போன்ற நபிமார்களின் மக்களில், அவர்களின் தூதை ஏற்க மறுத்தவர்களையெல்லாம்**

அல்லாஹ் எப்படி அழித்தான் என்பதனை எடுத்துக்காட்டாக கூறப்பட்டுள்ளது. (ஸூரா - அல்ஃபுர்கான்; பிரிவு: 4)

5. அல்லாஹ் நிழலை எவ்வாறு (நீங்கள் செல்லுமிடமெல்லாம்) நீட்டுகின்றான் (என்று பாருங்கள்). அல்லாஹ் நாடினால் நிழலை ஒரே இடத்திலேயே நிலைக்கச் செய்திருக்க முடியும். (ஸூரா - அல்ஃபுர்கான்; பிரிவு: 5)

6. அவன்தான் உங்களுக்கு இரவை ஆடையாகவும், உறக்கத்தை ஓய்வாகவும், பகலை உழைப்பிற்கு ஏற்றதாகவும் ஆக்கியிருக்கிறான். அவன் தான் காற்றுகளை நற்செய்தியாக அனுப்புகின்றான். வானத்திலிருந்து தூய்மையான நீரைப் பொழியச்செய்கிறான். (ஸூரா - அல்ஃபுர்கான்; பிரிவு: 5)

7. அல்லாஹ்தான், இரு கடல்களையும் இணைத்து அதன் மத்தியில் ஒரு தடுப்பை ஏற்படுத்தியுள்ளான். ஒன்று இனிப்பானது; மற்றொன்று உவர்ப்பானது.. (ஸூரா - அல்ஃபுர்கான்; பிரிவு: 5)

8. காஃபிர்களிடம், ‘அளவற்ற அருளாளனாகிய அர்ரஹ்மானுக்கு ஸஜ்தா செய்யுங்கள்’ என்று கூறப்பட்டால், அவர்கள் “ரஹ்மான் என்றால் யார்? நீர் எங்களுக்கு கட்டளையிட்டதற்காக நாங்கள் ஸஜ்தா செய்ய வேண்டுமா?” என்றெல்லாம் கேட்கின்றனர். (ஸஜ்தா - 8) (ஸூரா - அல்ஃபுர்கான்; பிரிவு: 5)

9. அல்லாஹ்வினுடைய உண்மையான அடியார்கள், பூமியின் மேல் பணிவாக நடப்பார்கள். அறிவீனர்கள், அவர்களிடம் பேசினால் “ஸலாம் - சாந்தி” என்று பதிலளிப்பார்கள். (ஸூரா - அல்ஃபுர்கான்; பிரிவு: 6)

10. முஃமின்கள் பின்வருமாறு துஆ செய்வார்கள்: “எங்களுடைய மனைவிகள் மற்றும் குழந்தைகளிலிருந்து எங்களுக்கு கண்குளிர்ச்சியை வழங்குவாயாக! பயபக்தியுள்ளோருக்கு எங்களை முன்னோடிகளாக ஆக்குவாயாக! (ஸூரா - அல்ஃபுர்கான்; பிரிவு: 6)

11. அவர்கள் பொறுமையோடு இருந்ததின் காரணமாக சொர்க்கத்தில் உயர்ந்த இடத்தை அடைவார்கள். அங்கு அவர்கள் முகமன் கூறி வரவேற்கப்படுவார்கள். அங்கேயே அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள். (ஸூரா - அல்ஃபுர்கான்; பிரிவு: 6)

## ஒரு பார்வை - பகுதி 4

**காஃபிர்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்று நபி (ஸல்) அவர்களிடம் அல்லாஹ் கூறுகிறான். மூஸா (அலை), ஃபிர்அவ்ன் சந்திப்பு மற்றும் சூனியக்காரர்களுடன் நடந்த போட்டி பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. மூஸா (அலை) அவர்களுக்கு முன்னால் செங்கடலும், பின்னால் ஃபிர்அவ்னுடைய படையும் இருந்தபோது, அவர்களது உறுதியான ஈமான் அவர்களைக் காப்பாற்றியது. இப்ராஹீம் (அலை) மற்றும் நூஹ் (அலை) தம் மக்களிடம் அல்லாஹ்வை வணங்குமாறு அழைப்பு விடுத்தது குறிப்பிடப்படுகிறது.**

## தராவிஹ் - 15: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 26, அஷ்ஷுஅரா; வசனம்: 1 - 122; பிரிவு: 1 - 6

1. **தா ஸீம் மீம்! இவை தெளிவான வேதத்தின் வசனங்களாகும். (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 1)**

2. **நபியே! அவர்கள் ஈமான் கொள்ளவில்லை என்பதற்காக உங்களை நீங்களே அழித்துக் கொள்ள வேண்டாம். (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 1)**

3. **அல்லாஹ் நினைத்திருந்தால் வானத்திலிருந்து ஓர் அத்தாட்சியை இறக்கி, அவர்களை ஏற்றுக் கொள்ளும்படி செய்திருப்பான். ஆனால் அல்லாஹ் அதனை விரும்பவில்லை. (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 1)**

4. **மூஸாவுக்கும், ஃபிர்அவ்னுக்கும் இடையே நடைபெற்ற சம்பவத்தை நினைவு கூறுகிறான். ஃபிர்அவ்னிடம் சென்று இஸ்ரவேலர்களை தங்களுடன் அனுப்பிவைக்க வேண்டுமென மூஸா (அலை) அவர்களுக்கும், அவர்களது சகோதரர் ஹாரூன் (அலை) அவர்களுக்கும் அல்லாஹ் கட்டளையிட்டான். (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 2)**

5. மூஸா (அலை), ஃபிர்அவ்ன் சபைக்கு வந்தபோது அவன், "உலக மக்களுக்கு யார் இறைவன்?" என்று கேட்டான். அதற்கு மூஸா (அலை), "வானங்களுக்கும், பூமிக்கும் மற்றும் இவ்விரண்டுக்குமிடையே உள்ளவற்றுக்கும் அல்லாஹ் ஒருவனே இறைவன் ஆவான். அவனே உங்களுக்கும், உங்கள் முன்னோர்களுக்கும் இறைவன்", எனக் கூறினார். (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 2)

6. அதற்கு ஃபிர்அவ்ன், "நிச்சயமாக உங்களிடம் அனுப்பப்பட்டிருக்கும் இந்த தூதர் ஒரு பைத்தியக்காரரே ஆவார். என்னை அன்றி வேறு இறைவனை நீர் கற்பித்தால் உம்மை சிறையில் அடைப்பேன்" எனக் கூறினான். (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 2)

7. அதற்கு மூஸா (அலை), "நான் உனக்குத் தெளிவான ஓர் அத்தாட்சியைக் கொண்டு வந்திருக்கிறேன்" எனக்கூறி, அவர் தம் கைத்தடியைக் கீழே எறிந்தார். அது ஒரு மலைப்பாம்பாகி விட்டது. அவர் தம் கையை வெளியில் எடுத்தார். உடனே அது பார்ப்பவர்களுக்கு பளிச்சிடும் வெண்மையானதாக இருந்தது. (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 2)

8. ஃபிர்அவ்ன் அவனது பிரமுகர்களிடம், "நிச்சயமாக இவர் கைதேர்ந்த சூனியக்காரர்தான்" என்றான். மேலும் தம் நாட்டு மாயா ஜால வித்தைக்காரர்களுடன் போட்டிக்கு ஏற்பாடு செய்தான். (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 3)

9. குறிப்பிட்ட ஒரு நாளில் சூனியக்காரர்கள் ஒன்று திரட்டப்பட்டனர். முதலில் அவர்கள் தங்கள் கயிறுகளையும், தடிகளையும் எறிந்து, "ஃபிர்அவ்னுடைய சிறப்பின் மீது ஆணையாக, நாமே வெற்றியடைவோம்" என்று கூறினார்கள். பிறகு மூஸா (அலை) தம் கைத்தடியைக் கீழே எறிந்தார்.

உடனே அது பெரும் பாம்பாகி அவர்கள் செயற்கையாக உருவாக்கியவற்றை விழுங்கி விட்டது. (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 3)

10. இதைப் பார்த்தவுடன் சூனியக்காரர்கள், "அனைத்து உலகங்களின் இறைவன் மீது நாங்கள் ஈமான் கொண்டோம். அவனே, மூஸாவுக்கும், ஹாரூனுக்கும் இறைவனாவான்" என்று கூறினர். (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 3)

11. 'மாறு கால், மாறு கை வாங்குவேன்' என்று ஃபிர்அவ்ன், அச்சுறுத்திய பிறகும் கூட அந்த வித்தைக்காரர்கள் அதை பொருட்படுத்தவில்லை. அவர்கள், "அதனால் எங்களுக்கு எந்தக் கெடுதியுமில்லை. நிச்சயமாக நாங்கள் எங்கள் இறைவனிடம்தான் திரும்பிச் செல்வோம். இறைநம்பிக்கை கொண்டவர்களில் நாங்கள் முதன்மையானவர்களாக இருப்பதினால் எங்கள் இறைவன் எங்கள் குற்றங்களை மன்னித்து விடுவான்" எனக் கூறினார்கள். (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 3)

12. இரவோடுஇரவாக மூஸாவும், அவருடைய மக்களும் ஃபிர்அவ்னிடமிருந்து தப்பிச் செல்லுமாறு அல்லாஹ் மூஸா (அலை) அவர்களுக்கு வஹி அறிவித்தான். ஃபிர்அவ்னும், அவனது படையினரும் அவர்களை துரத்தி வந்தனர். (எதுவரையெனில் இவர்கள் செங்கடலுக்கு முன்னால் நிற்கும் வரை). (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 4)

13. அவர்களுக்கு முன்னால் செங்கடலும், பின்னால் ஃபிர்அவ்னுடைய படையும் இருந்தது. மூஸா (அலை) அவர்களுடைய கூட்டத்தினர், "நிச்சயமாக நாங்கள் பிடிக்கப்பட்டு விட்டோம்" என்றனர். "என்னுடைய இறைவன் என்னோடு இருக்கின்றான். அவன் நிச்சயமாக வழிகாட்டுவான்", என்று மூஸா (அலை) சொன்னார்கள். (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 4)

14. தன்னுடைய கைத்தடியால் கடலில் அடிக்குமாறு மூஸா (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வஹீ அறிவித்தான். உடனே கடல் பிளந்தது; பல பாதைகளாக ஆனது. ஒவ்வொரு பாதையும், மலையளவு உயரமாக இருந்தது. முஃமின்கள் கடலைக் கடந்தனர். ஃபிர்அவுனும் அவனது படையும் அவர்களைத் தொடர்ந்தனர். (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 4)

15. அல்லாஹ் மூஸா (அலை) அவர்களையும், அவரது மக்களையும் இவ்வாறாக காப்பற்றினான். ஃபிர்அவுனும் அவனது படையும் நெருக்கத்துக்கு உள்ளாகி கடலுக்குள் மூழ்கினர். நிச்சயமாக இதில் படிப்பினைகள் உண்டு. ஆனால் பெரும்பாலான மக்கள் அதை கற்றுக் கொள்ளவில்லை. அல்லாஹ்வை நம்பிக்கை கொள்பவர்களாகவும் இல்லை. (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 4)

16. இப்ராஹீம் (அலை) அவர்களின் சம்பவம் பற்றி அல்லாஹ் கூறுகிறான். அவர் தம் தந்தையையும், தம் சமூகத்தவரையும் நோக்கி, “நீங்கள் எதை வணங்குகிறீர்கள்?” என்று கேட்டபோது, அவர்கள் “நாங்கள் சிலைகளை வணங்குகிறோம்; அவற்றின் வணக்கத்திலேயே நாங்கள் மூழ்கியிருப்போம்” என்று கூறினார்கள். (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 5)

17. அதற்கு இப்ராஹீம் (அலை), “நீங்கள் அவற்றை அழைக்கும் போது அவை காதுகொடுத்துக் கேட்பதில்லை. மேலும் அவை உங்களுக்கு நன்மையோ அல்லது தீமையோ செய்வதில்லை. ஆதலால், நீங்கள் அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும்" என அறிவுறுத்தினார்கள். ஆனால் அம்மக்கள், தங்களுடைய மூதாதையர்களெல்லாம் இச்சிலைகளைத்தான் வணங்கினர் (ஆகவே அல்லாஹ்வை வணங்க முடியாது) என்று கூறினர். (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 5)

18. இப்ராஹீம் (அலை) அவர்களின் துஆ: "யாஅல்லாஹ்! எனக்கு ஞானத்தை வழங்குவாயாக! என்னை நல்லோர்களுடன் சேர்த்திடுவாயாக! எனக்குப் பின்வரும் சந்ததிகளிடையே எனக்கு அழகிய நற்புகழை ஏற்படுத்துவாயாக! சொர்க்கத்தினுடைய வாரிசுகளில் ஒருவராக என்னை ஆக்குவாயாக!" (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 5)

19. கியாமத் நாளில் சுத்தமான இதயத்தைக் கொண்டு அல்லாஹ்விடம் வருபவர்களைத் தவிர வேறு யாரும் பாதுகாப்புப் பெற மாட்டார்கள். (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 5)

20. நூஹ் (அலை) அவர்களின் மக்களைப் பற்றிய நினைவு கூறல்: நூஹ் (அலை) அவர்கள் தம் மக்களை அல்லாஹ்வின் பக்கம் தொடர்ந்து அழைத்த வண்ணமிருந்தார்கள். ஆனால் அவர்கள் வரம்பு மீறிச் சென்று "நீர் இதை நிறுத்தவில்லையென்றால் உம்மைக் கல்லெறிந்து கொல்வோம்" என்றார்கள். (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 6)

21. நூஹ் (அலை), "என் இறைவனே! என்னுடைய சமூகத்தார்கள் நிச்சயமாக என்னைப் பொய்யாக்கி விட்டார்கள். ஆகவே, நீ எனக்கும், அவர்களுக்குமிடையே தீர்ப்புச் செய்து, என்னையும், என்னுடனிருக்கும் முஃமின்களையும் இரட்சிப்பாயாக!", என்று அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள். (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 6)

22. அல்லாஹ் நூஹ் (அலை) அவர்களையும், அவரது மக்களையும் கப்பலில் ஏற்றிக் காப்பாற்றினான். அவரை ஏற்காத மக்களை, வெள்ளப் பிரளயத்தில் மூழ்கடித்தான். நிச்சயமாக இதில் மிகப் பெரும் படிப்பினை உண்டு. ஆனால் பெரும்பாலானோர் அதிலிருந்து பாடம் கற்பதில்லை. (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 6)

## ஒரு பார்வை - பகுதி 5

**ஹூத் (அலை), ஸாலிஹ் (அலை), லூத் (அலை) மற்றும் ஷுஐப் (அலை) ஆகியோர்களின் வரலாறுகள் விவரிக்கப்பட்டுள்ளது. அவர்களின் சமூகத்து மக்கள் அல்லாஹ்வின் எச்சரிக்கையை நிராகரித்ததால் அவர்கள் அழிக்கப்பட்டனர். இந்த வரலாறுகள் நமக்கு ஒரு பாடமாக வழங்கப்படுகின்றன. ஆனால் பெரும்பாலானோர் அதிலிருந்து பாடம் கற்பதில்லை.**

## தராவிஹ் - 15: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 26, அஷ்ஷுஅரா; வசனம்: 123 - 227; பிரிவு: 7 - 11

1. **ஆத் சமுதாயத்தினர் மற்றும் அவரது சகோதரர் ஹூத் (அலை) அவர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளது. (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 7)**

2. **ஹூத் (அலை) அவர்கள் மக்களிடம், "நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மேலும், இதற்காக நான் உங்களிடம் யாதொரு கூலியும் கேட்கவில்லை. நீங்கள் ஒவ்வோர் உயரமான இடத்திலும் ஏன் வீணாக சின்னங்களை நிறுவுகின்றீர்கள்? நீங்கள் நிரந்தரமாக இருப்பதற்காகவா அழகிய வேலைப்பாடுகள் மிக்க மாளிகைகளை அமைத்துக் கொள்கின்றீர்கள்?" என்றார். (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 7)**

3. **"இன்னும் நீங்கள் யாரையாவது குற்றங்களுக்காக தண்டித்தால், மிகவும் அடக்குமுறையாளர்களாக ஆகிவிடுகிறீர்கள். எனவே, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். எனக்கு கீழ்படிந்து நடங்கள். அவன்தான் உங்களுக்கு கால்நடைகளையும், தோட்டங்களையும், நீரூற்றுக்களையும், பிள்ளைகளையும் கொடுத்து உதவினான்" என்றார். ஆனால், அம்மக்கள் ஹூத் (அலை) அவர்களின் அறிவுரைகளை முற்றிலுமாக புறக்கணித்தனர். அல்லாஹ்**

அவர்களை அழித்து விட்டான். (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 7)

4. நிச்சயமாக இதில் மிகப்பெரும் படிப்பினை உண்டு. ஆனால் பெரும்பாலானோர் அதிலிருந்து பாடம் கற்பதில்லை. அல்லாஹ்வை நம்பிக்கை கொள்பவர்களாகவும் இல்லை. (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 7)

5. ஸமூத் மற்றும் அவர்களது சகோதரர் ஸாலிஹ் (அலை) அவர்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 8)

6. அம்மக்கள் ஆணவம் கொண்டு, மலைகளைக் குடைந்து வீட்டைக் கட்டினர். அதனால் அவர்கள் களியாட்டம் மிக்கவர்களாய் குழப்பம் செய்ய முற்பட்டனர். அல்லாஹ்வுக்கு அஞ்சி, கீழ்படிந்து நடக்குமாறு ஸாலிஹ் (அலை) அவர்களை எச்சரித்தார்கள். அதற்கு அம்மக்கள், அவரை சூனியம் செய்யப்பட்டவர் எனக் கூறி தங்களுக்கு ஓர் அத்தாட்சியை (காட்டும்படி) கோரிக்கை வைத்தனர். (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 8)

7. ஒரு பெண் ஒட்டகம் அத்தாட்சியாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. கிணற்றிலிருந்து ஒருநாள் ஒட்டகத்திற்கு, மற்றொருநாள் அவர்களுக்கென்று தண்ணீர் குடிக்க முறைவைக்கப்பட்டது. ஒட்டகத்துக்கு எவ்விதத் தீங்கும் செய்யக்கூடாது என்றும், அதை மீறினால் கடினமான வேதனை அவர்களைப் பிடித்துக் கொள்ளும் என்றும் ஸாலிஹ் (அலை) எச்சரித்தார்கள். (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 8)

8. ஆனால் அவர்கள் அப்பெண் ஒட்டகத்தை கொன்று விட்டனர். அல்லாஹ்வின் வேதனை அவர்களை பிடித்துக் கொண்டது.

நிச்சயமாக இதில் மிகப் பெரும் படிப்பினை உண்டு. ஆனால் பெரும்பாலானோர் அதிலிருந்து பாடம் கற்பதில்லை. அல்லாஹ்வை நம்பிக்கை கொள்பவர்களாகவும் இல்லை. (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 8)

9. லூத் (அலை) அவர்களின் சமுதாயத்தைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 9)

10. அவர்கள் ஓரினச்சேர்க்கையில் ஈடுபாடு கொண்டிருந்தனர். லூத் (அலை), "உங்கள் இறைவன் உங்களுக்காகப் படைத்துள்ள உங்கள் மனைவிமார்களை விட்டு விடுகிறீர்கள். நீங்கள் வரம்பு கடந்த சமூகத்தாராக இருக்கின்றீர்கள்" என்றார். (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 9)

11. அதற்கு அம்மக்கள், அவர் இம்மாதிரி பேசுவதை நிறுத்தாவிட்டால், அவர் ஊரிலிருந்து வெளியேற்றப்படுவார் என்று மிரட்டினர். லூத் (அலை), “என் இறைவனே! என்னையும், என் குடும்பத்தாரையும் இவர்கள் செய்து கொண்டிருக்கிற தீயவற்றிலிருந்து பாதுகாப்பாயாக!” எனப் பிரார்த்தித்தார். (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 9)

12. அல்லாஹ், லூத் (அலை) அவர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் காப்பாற்றினான், அவரின் மனைவியைத் தவிர. இறைமறுப்பாளர்கள் அனைவர் மீதும் கல்மாரி பொழியப்பட்டு அழிக்கப்பட்டனர். நிச்சயமாக இதில் மிகப் பெரும் படிப்பினை உண்டு. ஆனால் பெரும்பாலானோர் இதிலிருந்து பாடம் கற்பதில்லை. (ஸூரா - அஷ்ஷூஅரா; பிரிவு: 9)

13. அளவு, நிறுவைகளில் மோசடி செய்யவேண்டாமென எச்சரித்து, ஒரே இறைவனான அல்லாஹ்வை நம்பவேண்டும் என்றும் ஷுஐப் (அலை) அவர்கள் தோப்புக்காரர்களுக்குக்

கூறினார். மேலும் "மனிதர்களுக்கு கொடுக்க வேண்டிய பொருட்களை நீங்கள் அளவுகளில் குறைத்து விடாதீர்கள். நீங்கள் பூமியில் குழப்பம் செய்பவர்களாக அலையாதீர்கள்" என்றார். (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 10)

14. அம்மக்கள் அவரை சூனியக்காரர் என்றனர். மேலும் அவர்கள், "நீர் எங்களைப் போன்ற ஒரு மனிதரே அன்றி வேறு இல்லை. எனவே, நீர் உண்மை சொல்பவராக இருந்தால், வானம் இடிந்து அதிலிருந்து ஒரு பகுதியை எங்கள் மீது விழச் செய்யும்" என்று கூறினர். (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 10)

15. மேகங்கள் நிழலிட்ட அந்நாளின் வேதனை அவர்களைப் பிடித்துக் கொண்டது. அது பயங்கரமான நாளின் வேதனையாக இருந்தது. நிச்சயமாக இதில் மிகப் பெரும் படிப்பினை உண்டு. ஆனால் பெரும்பாலானோர் அதிலிருந்து பாடம் கற்பதில்லை. அல்லாஹ்வை நம்பிக்கை கொள்பவர்களாகவும் இல்லை. (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 10)

16. நபியே! நீர் மக்களை எச்சரிக்கை செய்ய வேண்டும் என்பதற்காக உமது உள்ளத்தில் நம்பிக்கைக்குரிய பரிசுத்த ஆன்மாவான ஜிப்ரயீல் (அலை) மூலம் இந்த குர்ஆன் இறக்கி வைக்கப்பட்டது. (ஸூரா - அஷ்ஷுஅரா; பிரிவு: 11)

---